“எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு”

லோகவியாஸன்.

மாதாந்தரப் பிரசுரம்.

தொகுதி 6] சென்னை, 1909௵ பிப்ரவரி௴ [பகுதி 2.

ஸ்ரீ தில்லைவளாகம், சிவானந்தாது பூநிலையம்

திருச்செந்தூர்

ஸ்ரீலஸ்ரீ ஆநந்தஷண்முக சரணாலய ஸ்வாமிகள்

திருவாய் மொழிந்தருளியது.

கணபதி துணை.

சிவகுருநாதன் திருவருளுண்டாக.

பாவலர்நா யகன்வேலைப் பண்ணவர்நா யகன்மதிக்குல
காவலர்நா யகன்றமியேன் கருத்தமர்நா யகன்சைவத்
தாவலர்நா யகன்சென்னைத் தலைத்தமர்நா யகனகில
நாவலர்நா யகன்முத்து விரனெனு நாயகனே.

சீராரும் புலியூரின் திலகமென விலகுதிருச்
சென்னை வாசன்
பாராரும் புகழ்ந்தேத்து மொருதசாவ தானிபல்
கலைதேர் ஞானி
காராரும் பூஞ்சோலை முத்துவீ ரக்கவிஞன்
கருத்தி டேற
வோராருஞ் சிவகுருவி னிணையடியை யெந்நாளு
மிறைஞ்சு வாமே.

REGISTERED
30 JUN 1910
MADRAS

ஆமாது புணர்மாலும் போற்றரிய மூவிலைவேற்
புனிதன் கேட்ப
வோமாதி மந்திரத்தி னுண்மையெலா முணர்ந்துமுறை
யுறைத்துக் காட்டி
யாமாதி யந்தமிலா தைந்தொழிலுங் கடவியப்பா
லறியா நிற்குங்
கோமான்ற னிணையடியைக் குறிக்குமுனக் கேதுகுறை
குவலயத்தே.

சிவகுருநாதனருள் முன்னிட்டு இப்பாடல்கள் எமக்குக்கிடைக்கப்பெற்றதும் சிரங்கொடுதாங்கிநமஸ்கரித்து ஸ்வாமிகளுடைய திருவருட்கிலக்கான பெரும் பேறெய்திய இன்றுமுதல் பலவகை சுபங்களுங் குலவுமெனுந் திடத்தால், முழுமனதுடன் பத்திரிகை வாயிலாக வெளியிடத் துணிந்தாம். பத்—ர்.

ராஸிலஸ்.

ஆங்கில மொழிபெயர்ப்பு.

7-ஆம் பக்கத்தொடர்ச்சி.

அரண்மனை சமைந்திருப்பது ஏரி நீர்மட்டத்திற்கு மேல் மூன்பின் முப்பது தப்படி உயர்ந்த மேட்டுத்தரையில். வாசம்செய்வோர் தராதரப்படி வேலைப்பணிக்கு ஏறத்தாழ உள்ள வெவ்வேறு கூடம் கொலுச்சாவடிகள் அவ்வரண்மனையில் வகுத்து அமைத்திருந்தன. அந்தக் கூடங்கள் சாவடிகளின் மூகடு வில்வளைவாகக் கனத்துப்பருத்த கற்களால் சமைந்திருந்தது. கல்லையும் கல்லையும் சந்துதெரியாமற் பொருத்தியது ஒருவிதப் பசை. அந்தப்பசை நாள் ஏற ஏற இறுகிக் கல்லோடு கல்லாய்ச் சேரும் இயற்கையுள்ளது. அந்தப்பலத்த கட்டடம் சமைத்துவெகுநூறாண்டுசென்றும், சரற்காலத்துப் பெருமழைக்கும் நிரக்ஷரேகை மண்டலத்தில்சாதாரணமாய் அடிக்கும் சண்டமாருதத்திற்கும் அணுவத்தனையும் அசையாமல் கட்டுறுதி அழியாதிருந்தது. பழுது சிறிதும் இல்லாத மண்டபத்தைப் பழுதுபார்க்க நிமித்தம் இல்லையே.

அம்மாளிகை வெகு விஸ்தாரமானது. பூர்வம் ஒருவர்பின் ஒருவராக் அங்கிருந்து அதன் அந்தரங்க உறுப்பு அனைத்தையும் அறிந்த உத்தியோகஸ்தர் சிலரன்றி, மற்றொருவரும் அதை ஆதியோடந்தம் அறியார். அச்சமும் ஐயமும் சிற்பிவடிவுதாங்கிக் கட்டடவிதி கற்பித்திருக்குமென்று உத்தேசிக்கத் தக்கதாக அது மிகு சூக்ஷ்மமாய் அமைந்திருந்தது, ஒவ்வொரு

அறைக்கும் வாசல் இரண்டு, அந்தரங்க வாசல் ஒன்று, பகிரங்க வாசலொன்று. அவரவர் வசிக்கும் மனைவகுப்பு அனைத்திற்கும் ஒன்றுக்கொன்று மேன்மாடத்தினின்றுவது கீழ்மாடத்தினின்றுவது போக வர அந்தரங்க மார்க்கம் உண்டு. கீழ்மாடத்தினின்றுசெல்வது தரைக்கீழ்ப்பாதை. நிரைநிரையாயிருக்கும் தூண்கள் பலவற்றினுள் அறைகள் அமைந்திருந்தன. தூணின் புறத்தைக் காண்பவர்க்கு அதன் அகம் குழிந்திருக்குமென்று அற்பமேனும் சந்தேகம் தட்டாது. தொன்றுதொட்டு அடியடியாய் முடி தாங்கி அரசாண்ட மன்னர் அந்தத் தூணறைகளில் அளவற்ற திரவியம் சேமித்துவைத்தனர். மயிர்க்கிடையும் சந்து தெரியாமல் தூணறைகளின் வாயை அடைத்திருக்கும் வெண் கற்களைப் பஞ்சம் - யுத்தமுதலிய கடிய ஆபத்துகளால் தேசம் பீடிக்கப்படும் அருஞ்சமயத்திலன்றி, மற்றப்படி அரசர் திறந்து ரொக்கம் கைக்கொள்வதில்லை. தூணறைகளில் சேமிக்கப்படும் ரொக்கக்கணக்கு ஒரு புஸ்தகத்திற் பதிவு செய்திருந்தது. அந்தக்கணக்குப் புஸ்தகம் ஒளித்து வைத்திருந்த அருக்கத்திற்குள் சக்கரவர்த்தியும் இளவரசருமொழிய மற்றொருவரும் போக விதி இல்லை.

போகபூமி ஆகிய பள்ளத்தாக்கில் ராஸெலஸுக்கு மனக்குறை உண்டானது.

இங்கிருந்த அபிஸினிய சக்கரவர்த்தி புத்திரர்-புத்திரிகள் கஷ்ட ஜீவனம் இன்னதென்று ஒரு நாளும் அறியார்கள். அவர்கள் மாறி மாறி உண்டுடுத்து உவப்பதும் உறங்குவதுமாய்நாள்கழித்தார்கள். இனிய விநோதம் செய்யும் திறமையுள்ள வித்தகர் எல்லோரும் அவர்களைச் சுற்றிக்கொண்டிருந்தனர். விஷயவாசனைகள் எல்லாம் அவர்கள் இதயத்திற்கு இதமாயிருந்தன. புஷ்பம்பரிமளிக்கும் நந்தவனங்களில் அவர்கள் உலாவி, அரணிப்பான இருக்கங்களில் அச்சமற்று நித்திரைசெய்தார்கள். அந்தப்பதவியே தங்களுக்கு ஆனந்தபதவியென்று அவர்கள் சிந்தை உவக்கும்படி ஏதேது உபாயதந்திரம் உண்டோ, அவை அனைத்தும் செய்யப்பட்டன. அவர்களுக்குக் கல்வி கற்பித்த சான்றோர் ராஜாதிகாரம் நிர்வகித்தும் ஊர்க்காறுபாறு விசாரித்தும் வருவோர்க்கு விளையும் துன்பத்தையும், மலையரணுக்குப் புறத்தில் எங்கும் தேசோபத்திரவம் தலைப்படுவதையும் அங்குள்ளவர்கள் மனவொருமையின்றி மல்லுக்கட்டி உழல்வதையும், சிறுவிலங்கைப் பெருவிலங்கு பட்சிக்குமாப்போல மனுஷரில் எளியாரை வலியார் பட்சிப்பதையுமே விரித்துரைத்துக் கொண்டுவருவார். இவைகளையன்றி மற்றொன்றையும் அந்தப்பண்டிதர் சொல்லுகிறதில்லை, அன்றியும், அவர்கள் பெற்ற பெருஞ்செல்வத்தைப்பற்றி அவர்களுக்கு மேலுமேலும் அபிமானமும் உண்டாக்கும் பொருட்டு, அந்த வித்தியாகுருக்கள் அவ்வானந்த பூமியின் அருமைபெருமையைச் சுட்டி அன்றன்று நூதனமாகச் சிந்து பதம்முதலிய செய்யுட்களை இயற்றி, செவிகூர்ந்து கேட்டு மனம் களியப்

பாடுவார்கள். இன்பமும் சுகமும் தரும் விதவிதமான போகங்களின் மர்மத்தை அவர்களுக்கு அடிக்கடி எடுத்துச் சொல்லி ஆசைமிகவூட்டுவார்கள். உதயாதி அஸ்தமன பரியந்தம் நாழிகைதோறும் உண்டாட்டும் கொண்டாட்டமுமே அவர்களுக்கு ஓயா மலியமா யிருந்தவை. இந்த உபாயங்கள் சிதறுமற் பெரும்பாலும் சித்தித்தன. எனிலோ தாஸ்யச் செல்வ ராஜகுமாரர் எவரும் மனங்கொள்ள வில்லை. அவர்கள் உள்ளநாள் உள்ள மட்டும் இயற்கைப்பேறு செயற்கைப்பேறு இருவகைப் பேறும் தமக்குக் கைக்கு எட்ட அமைந்திருப்பதை ஐயமறக் கண்டு தேறினார்கள். உபசாந்தத்திற்கு உறைபதி யாகிய அவ்விடத்தில் இருந்து வாழ இடம் பெறாமல் சூழித்துரும்பென அங்கும் இங்கும் அலைந்து, குறைக்காற்றில் பஞ்சுபோலப் பறந்து, துன்பத்திற்கு அடியாராகி அவஸ்தைப்படும் மனுஷரை நினைத்து நினைத்துப் பரிதபித்தார்கள்.

இவ்வாறே அவர்கள் அன்றன்று அதிகாலையில் எழுந்து பகல்முழுதும் கூடிக் குலாவி அவரவர் இதயம் களிகூர்ந்து, ராத்திரி காலத்தில் கிலேசமற்று படுத்து அயர்ந்து தூங்குவார்கள். ராஸிலஸ் ஒருவன் மாத்திரம் இருபத்தாறுவது பருவம் தொடங்கி அவர்கள் கேளிக்கைகளில் வெறுப்புற்று அவர்கள் கூட்டத்தில் கூடாமல் தன்னந்தனியே உலாவி மௌனயோகாப்பியாசம் செய்து உவக்கத் தலைப்பட்டான். அறுசுவை உண்டிவகை அனைத்தும் புஷ்கலமாய் வட்டித்திருக்கும் பந்தியில் உட்கார்ந்துமற்ற ராஜகுமாரர் அவரவர் நாவிற்கு இதமான உண்டிகளைப் பரிவோடு உண்ண, ராஸிலஸோ மெய்மறந்தவன்போல் உணவுறா திருப்பான். சிலவேளை சங்கீத காலக்ஷேபத்தில் யாவர் சிந்தையும் அழுந்தி யிருக்கும் சமயத்தில் அவன் சடக்கென்று எழுந்து அந்தக் கானம் செவிக்கு எட்டாத தூரத்திற்கு விரைந்து செல்வான். கும்மாளம் செய்வோர் அவன் குணம் மாறியது கண்டு அவனுக்கு மீளவும் சிற்றின்பத்தில் ஆசை புகட்டப் பார்த்தனர். தன்னைக் காத்து இங்கிதம்பேசும் அவர்கள் சொல்லை அவன் லக்ஷியம் செய்கிறதில்லை. அவர்கள் வரவழைக்கும் பொழுது மறுத்து, மரம் அடர்ந்து நிழலிட்டிருக்கும் ஒதுக்கிடமாகிய நதிதீரத்திற்குப் போய், குயில் முதலிய பக்ஷிகள் கிளைகளிற் படிந்து இனிதாய்க் கூவுவதைச் செவிகொடுத்துக் கேட்பான். சில வேளை இளவாளை வரால் கெண்டை முதலிய மச்சங்கள் நீரிற் பாய்வதைப் பார்ப்பான், அடுத்து, பசும்புல் நிலத்திலும் மலைச்சாரிலும் ஆடு மாடு குதிரை கழுதை முதலிய நாற்கால் விலங்கினம் திரளாய்ச் சேர்ந்து உலாவித்திரிவதைக் காண்பான், அவற்றுள் சில தழை பூண்டு புல் மேயும், சில அடர்ந்தசெடி ஒதுக்கில் அச்சமறப் படுத்து உறங்கும், ராஸிலஸுக்கு இந்த விபரீதம் உண்டானதை எல்லாரும் கவனித்தனர். அங்குள்ள அறிஞரில் முக்கியமாய் ஒருவருடன் வார்த்தையாடுவது முன்பு அவனுக்கு ஆனந்தமா யிருக்கும். அவர் அவன் மனோசஞ்சலத்திற்கு நிமித்தம் யாதென்று கண்டறிய நாடி ஒரு நாள் அந்தரங்கமாய்

அவனைத் தொடர்ந்து போனார். அவர் அண்டையிற் போயிருந்ததை அறியாமல், ராஸிலஸ் மலைச்சாரில் தழைமேய்ந்துக் கொண்டிருந்த வெள்ளாடுகளைச் சிறிது நேரம் உற்றுப்பார்த்து, தனக்கும் அவைகளுக்கும் உள்ள தாரதம்மியத்தைச் சொல்லத் தொடங்கினான்.

அவன் வாய்ப்பிறப்பு இது:— "மனுஷர் இயற்கை ஒன்றும், மற்றுள்ள ஜீவகோடிகள் அனைத்தின் இயற்கை ஒன்றுமாக வேறுபடும் காரணம் என்னை? என் அண்டையிற சஞ்சரிக்கும் விலங்குஜாதி அனைத்திற்குமெனக்குள்ள தேக உபாதிகள் உண்டு. பசிக்கும் பொழுது, அவைபசிஅடங்கப் புல் மேயும், தாகம் எடுக்கும்பொழுது, தாகம் தீரத் தண்ணீர் குடிக்கும், இவ்வாறு பசி தாகம் தீரவும், அவை திர்ப்தி அடைந்து நித்திரை செய்யும் அயர்ந்து தூங்கிவிழித்து எழுந்த பின்னும் உண்டாகும் பசிதாகத்தைமேற் சொல்லியபடி தீர்த்துப் பதைப்புறுதிருக்கும். அவ்விலங்கைப்போல்எனக்கும் பசி தாகம் முதலிய தேக உபாதிகள் உண்டு. இந்த உபாதிகள் அன்னபானாதிகளால் தீர்ந்த பின்னும், என் பதைப்புத் தீருகிறதில்லை பசிதாக முதலிய குறைகளால் விலங்கும் வருந்துகின்றது. நானும்வருந்துகிறேன் அக்குறை தீரவும், விலங்குக்குத் திர்ப்திஉண்டாகின்றது எனக்கோ திர்ப்தி இல்லை. பசி தீர உண்டு, மீண்டும் பசிக்கிறவரையில் என் மனம் குறைவிசாரப் படுகின்றது. பொழுது போகாமல் அலுப்பு உண்டாகின்றது, அன்னபானாதிகளில் விருப்பு உண்டாகும்படி பசி தாகம் மிஞ்சவேண்டுமென்று வாஞ்சிக்கிறேன். பறவைகள் காய்-கனி-தானியாதிகளைக் கொத்திப் பொறுக்கி இரைகொள்ளி நிறையத் தின்றபின் சோலைகளுக்குப் பறந்துபோய் விருக்ஷக்கொம்புகளிற் படிந்து களிகூர்ந்து கூவும். அவை கூவும் அடிக்கொலி அன்று ஒருவிதம் இன்று ஒரு விதமல்ல; விகற்பமின்றி என்றும் ஒரே விதமாயிருக்கும். நானும் இன்னார் பாடகரை வரவழைத்து வீணாகானம் பண்ணுவித்துச் சங்கீதகாலக்ஷேபம் செய்விப்பதுண்டு. உண்டெனினும், நேற்று என் மனதிற்கு இனிதாயிருந்த பண்ணை இன்றும் கேட்டால், அலுப்பு உண்டாகாமற் போகாது, நாளைக்குக் கேட்கில், பின்னும் அலுப்பும் பெருகும். அதற்கு உரியபோகம் தெவிட்டாத ஞானேந்திரியபலம் எனக்கு இல்லை. போகம் தெவிட்டினும், என் மனம் இன்பம் அறியாதிருக்கின்றது. இந்த ஸ்தலத்தில் எற்கும் நுகர்ச்சி இல்லாத சூக்ஷமமான ஆறுவது இந்திரியம் ஏதோ மனுஷருக்கு உண்டு. இது நிஜம். பின்னும் சற்று தெளியச் சொல்லுகிறேன்.—பஞ்ச இந்திரியத்திற்குள் அமையாத ஆசை ஏதோ இருக்கின்றது. அவ்வாசை தீர்ந்தே ஆனந்தம் பிறக்கவேண்டும்."

இவ்வாறு மொழிந்தபின் ராஸிலஸ் தலை நிமிர்ந்து சந்திரோதய காலமாவது கண்டு, அரண்மனை முகமாய்த் திரும்பிப்போனான். வயற்காட்டு வழி போகும்பொழுது, நாலண்டையும் விலங்கினத்தைக் கண்டு, "நீங்கள் சுகபோகிகள். துக்கமனச்சுமை எடுத்துச் சொல்லும் என்னைக்கண்டு உங்களுக்கு மாற்சரியம் உண்டாக நிமித்தம் இல்லை, சாத்வீக பிராணிகாள், உங்

கள்பரமானந்தத்தைக் கண்டு நான் அசூயைப்படவுமில்லை. அது மனுஷர் இயற்கைக்கு உரிய பரமானந்தமல்லவே. உங்களுக்கு இல்லாத பரிசிரமம் அநேகம் எனக்கு உண்டு. துன்பப்படா திருக்கும்பொழுது துன்பத்திற்கு அஞ்சுகிறேன்; சிறுபான்மை, மறந்துபோன துன்பத்தை நினைக்கவும் எனக்கு உதைப்பு உண்டாகின்றது; சிறுபான்மை, இனித் துன்பம்வருமென்று எண்ணி என் நெஞ்சு அதிர்கின்றது. தெய்வம் மனுஷருக்கு நடுவுநிலை தவறாமல் இன்பத்தையும் துன்பத்தையும் ஏற்கும் அளவாய்ப் பிரித்துக் கொடுத்திருக்கிறது நிசம்." என்று சொன்னான்.

இவைபோலும் பலபல குறிப்புகளை வழி தொலையச்சொல்லிக் கொண்டு இளவரசன் அரண்மனைக்குத்திரும்பினான். அவன் இவைகளைமொழிந்தது தன்துயரை வாய்விட்டு அழுது அழுது சொல்லும் மாதிரியாக. கூரிய புத்திமானுதலால், அவனுக்குச் சிறிது சந்தோஷம் பிறந்தது. இப்பிறவித்துயரை நெஞ்சில் அழுத்தாமல் புளியம் பழமும் ஓடும்போலப் பட்டும் படாமல் அநுபவித்ததைத் தன் நெஞ்சு அறிந்து தன் குறை கூறியதனால் அவன் மனம் சற்றுத் தேறியது. இது அவன் முகக்குறியால் விளங்கிற்று. அன்று இராத்திரி அவன் பிறருடன் கூடி, நடந்த விநோதங்களில் சிந்தை வைத்தான். இதை முகமலர்ச்சியால் அறிந்து, அவன் மனோதுக்கச்சுமை குறைந்ததென்று எல்லாருஞ்சந்தோஷித்தனர்.

கமலாவதி.

12-ஆம் பக்கத்தொடர்ச்சி

பதினெட்டாநாள் மதனன் கட்டைவெட்டவில்லை. மலைமிசையுள்ள சுனை நீர் அருந்தி மாநிழலில் உட்கார்ந்து ஜோதிமதியின் பேரழகை நினைந்து மோகவலையிற் சிக்கி வருந்தி கடவுள் இன்னும் கிருபை செய்யவில்லையே யென பேரன்போடு துதித்து நெடுநேரம் தன்னை மறந்திருந்தான். இப்போது இரவுபனிரெண்டாகி மேலே அரைமணியும் ஆயிற்று. யாதொரு பொருளும் கட்புலனுக்குத் தெரியாது இருள்சூழ்ந்தது. மதனன் இப்போது கண்திறக்கவில்லை யெனினும் சாக்கிரத்தில் தானிருக்கிறான். ஒரு நிமிஷம் இரண்டு நிமிஷமாயிற்று மதனன் கண்களைத்திறந்தான், பேரிருளாயிருந்த வுடனே தன் பூர்வஸ்திதியை நினைந்துநகைத்தான். அரசகுமாரனுக்கு நகையுண்டான அந்நிமஷத்திலேயே தனக்குநேரே வடபுறத்தில் பேரொலியொன்று கிளம்பியது. அவ்வொலியின் மத்தியில் முகவசீகரமும் தேகமுழுவதும் போர்வையாயும் ஓர் ஆஜானுபவாகிய சுந்தர புருஷன் துலங்கினான். அப்புருஷன் பளபள வென்று மின்னுதலுடைய காவிவஸ்திரந் தரித்து படர்ந்தகன்ற நெற்றியினிடமாக விபூதி தூளித மணிந்து மார்பி

ணிடமாய் உருத்திராக்க மாலைபுனைந்து தலையில் பின்னிட்ட சடைகள் ஆல விழுதுகள்போல கயிற்றை கயிறதையாக புரள அமமலைமேல மெல்லென நடந்து வந்தார். மதனன் அச்சுந்தர புருஷனைக் கண்டான்.

அப்போது அரசகுமாரன் பயந்தான் என்று நாம் சொல்லாமலே இக்கதையினைப்படிக்கும் வாசகர்கள் அறிந்து கொள்வார்களாக. அவன் மனதிற்பெரும்பீதியுண்டாயிற்று. அதினால் தேகமெங்கும்நடுக்கங்கொண்டான் மனதில் பயத்தைத்தவிர வேறே யாதொரு நினைவும் தோன்றவில்லை. அச்சுந்தர புருஷன் நூல்பிடித்ததுபோல் மதனனுக்குநேரே வந்துகொண்டிருக்கிறார். அதையெண்ணி மதனன் பீதியடைந்தான் தேவபுருஷன் போன்ற அப்பெரியவர் அரசகுமாரனை நெருக்கி அவன்கையைத் தமது கரத்திற்பற்றி மதனா! பயப்படாதே. என்னைக்கண்திறந்துபார் என்று மதனனைநெடுநேரம் தடவிக்கொடுத்து பின்னர், மதனன் வருவதுதானே வரும் என மனதைத் திடப்படுத்தி தலை நிமிர்ந்து அவரைப் பார்த்தான் அப்பெரியவர் அவன் பயத்தை யொழித்து மதனா! நீ ஜோதிமதியின் பேரில் மையல் கொண்டிங்கு வந்தனையோவென, மதனன் பயந்தமுகத்தோடு ஆம் என்றான். அன்னவளையிப்போது காணவுனக்குபிரியமுண்டோ? உண்டெனச் சொல்லி மதனன் வாய்மூடுமுன்னமே ஜோதிமதி மதனன் அருகில்வந்து அவன் கட்புலனுக்குத் தோன்றினாள். அரசகுமாரன் அவளைத்தழுவ விரைந்தானாகையால் அத்தோற்றம் மறைந்தது. ஹா! என் சோலைக்குயிலே என் மனஞ்சோதிக்கப் பக்கத்திருந்த நீ இப்போது எங்கு மறைந்தாய், என் தேனே மானே யென்று பிதற்றலானான். பெரியவர் மதனா கூடிய சீக்கிரத்தில் அப்பெண் மணியை அடைவாய் வருந்தேல வருந்தேல் என மும்முறை கூறினார்.

மதனன்சந்தோஷித்தவனாய்அப்பெரியவர் பாதத்தில் வீழ்ந்துவணங்கி சுவாமி! ஜோதிமதியை யெனக்கு மனைவியாகும்படி திருவருள்செய்யவேண்டுமென யெளிய முகங்காட்டி நின்றான். அதற்கவர் அங்ஙனமே யாகுக வென்று தலையை யசைத்து அவரிடமிருந்த மிட்டாய் பொட்டளங்களில் ஒன்றை அரசகுமாரனிடங் கொடுத்துப் புசிக்கச்செய்தார் சற்றுநேரத்திற்கெல்லாம் சடையுடைய சன்யாசிகள் அநேகர் அங்குவந்து சேர்ந்தனர். சோதி சொலிப்புடன் பிரகாசிக்கும் அவர்களுடைய தேகவசீகரத்தை கண்டு மதனன் அதிசயித்தான், அக்கூட்டத்தார்கள் மதனனை வேலைக்காரனாக வைத்துக்கொண்டு சந்தோஷித்தனர். மதனனும் சொன்னவேலையை சுறுக்காய் செய்து அவர்களை சந்தோஷிப்பிப்பான். அச்சன்யாசிகள் ஓர் நாள் இரவு ஒன்பது பத்தரை மணிக்கு மதனனை தம்முடன் அழைத்துக்கொண்டு நகரிற் சென்று வேண்டும் வரையில் மிட்டாய் வகைகள் வாங்கிக் கொடுத்தார்கள்.

இவ்வளவும் ஓர் நாள் இரவு பத்துமணி யிருக்கலாம். அப்போது அக்கூட்டத்தார்களனைவரும் தாங்களணிந்திருந்த உடைகளை கழற்றி யெறிந்து கௌபீனத்தை யவிழ்த்துவிட்டு நிர்வாணமாயிருந்து அம்மலை மிசையிலொருபால் தேக்காக்களில் சமைத்த அன்னத்தையும்காய்கறிகளையும் பிசைந்து அதன்மேல் கஞ்சாத்தூளை தூவி அதற்கெதிரில்யாவரும் நிர்வாணமாய் நின்றுகொண்டு ஜபமாலை கையிற்பற்றி மந்திரசச்சாடனம்செய்து கொண்டிருந்தனர் இவர்களிவ்வா றிருக்குங்கால் ஓர் கூன் விழுந்த பெண்கிழம் நிர்வாணமாய் சரசர வென நடந்து வந்து அங்குபோட்டிருக்கும் பாடலுக்கு முன் உட்கார்ந்து கொண்டாள். பயங்கரமுடைய இக்கிழவியைக் கண்ட மதனன் பயந்து சற்றுநேரம் பொருத்து அவ்வம்மையார் தனக்கெதிரிற்படைத்திருக்கும் படையலில் கைவைத்து பிசைந்து அங்குநின்றிருந்த ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு பிடிசாதம் கொடுக்க வாங்கியுண்டு எல்லாரும் அவ்வம்மையார் காலில் வீழ்ந்து வணங்கினர் பின்னர் அவ்வம்மையார் தலைகவிழ்ந்தபடி கொண்டுவா கொண்டுவாவென அவர்களிருவர் மதனனைத் தூக்கிபோய் உட்கார்ந்திருக்கும அம்மையார் காலின்மேற் படுக்கவைத்தனர். அம்மையார் படையல் சாதத்தில் ஒருபிடிசாதத்தை யெடுத்து அவன் வாயிலிட்டு மூடு மூடு எனலும் அங்குநின்றிருவா மதனன் கண்ணைப் பொத்தினர் இப்போது மதனன் ஸ்வாபீகம் தப்பினனென்று நான் சொல்லவும் வேண்டுமோ. மூன்றுநாள் அவன்கண் விழித்துப்பார்த்தபோது ஆங்கிருந்த சித்புருஷர்களும் அம்மையாரும்காணோம், மதனன், மோசம்போனோமே என்று வருந்தி நிற்கையில் ஆடுமேய்க்கும் சிறுவனொருவன் வர, மதனன் சிறுவ இன்று என்ன கிழமையெனலும் அவன் ஞாயிற்றுக்கிழமையென ஆ. ஹா. இம்மலைமிசை நடந்த பூசை வெள்ளிக்கிழமை யல்லவோ இன்று மூன்றுநாளாகிறதே இதுவரையில் நாம்என்ன செய்தோம் எங்கிருந்தோம் ஜோதிமதியை நமக்கு மனைவியாக்கி வைக்கிறேன் என்று சொன்னபெரியவரைக்காணோமே சொன்ன சொல்லை நிறைவேற்று விடுவது பெரியவர்களழகா? என்றின்னணம் சிந்தித்துக் கொண்டிருக்கையில் முதன் முதல் மதனனைக் கண்டபெரியவர் அவனுக்குதரிசனமானார். அரசகுமாரன்பெரியவர் பாதத்தில் வீழ்ந்து நமஸ்கரித்து விடாது பற்றினன். பெரியவர் மதனா யெழுந்திருவென சிறுவன்தாங்கள் பாதாரவிந்தத்தை விடேன், ஜோதிமதியை யெனக்கு கடிமணஞ்செய்து வைப்பதாய் தாங்கள் கூறின் விடுவேன் இல்லையேல் இல்லையென்று பிடிவாதஞ்செய்தான். சித்தர்இடதுகாலைத்திமிறி யெடுத்து மதனன் சிரத்தை எட்டியுதைத்து அடா துன்மார்க்கத்தைத் துட்டுக்கொடுத்து பெறும்துரோகி இதனால் நீயடையும்பயன்யாது மூர்க்கா

மங்கையர்கள் யோனிமிசை வைத்திருக்குங் காதல்தன்னைப்
பங்குசெய்து நூற்றிலொரு பங்கெடுத்து—கங்கைமதி
வேணியரண் பாதார விந்தத்தில் வைத்தக்கால்
காணலாங் காணுக் கதி.

என்னும்பாடலின் பயனை நீயறியாயோ. இத்தேகமானது நீர் மேற்கு மிழி. அப்படிப்பட்ட அற்பதேகத்தை நாம் அடிக்கடி பெற்றுவருந்துவதை யொழித்து பேரின்பத்தையடைய முயலாமல் சீழ் இரத்தம் முதலிய துர்நாற்றங் கமழப்பெற்ற சத்த சாதுக்கள் செறிந்து ஈக்கள் மொய்க்கும் புண்ணுங்குழியாகிய யோனிமீதும் சிலந்தியென விம்மிய ஸ்தனத்தினிடத்தும் மோகங் கொண்டுழல்வது கேவலம் இழிவற்ற சிறியோர்செய்கையே யன்றி பெரியோர் செய்கையாகுமோ? ஆகவே மதனா! ஜோதிமதி மீது கொண்டிருக்கும் மோகப்பித்தை யொழித்து சுகதேசிகளாகிய, சித்தர்களென்னும் எங்கள் கூட்டத்தில் சேர்ந்திரு வென்றார். சித்தர் உரைத்த உரையால் மண்ணைக் கௌவிக்கொண்டிருந்த மதனன் யெழுந்து கைகட்டி ஸ்வாமிகாள்! ஜோதிமதியைவிட்டுச் சித்தனாயிருக்க எனக்குச் சிறிதும் இஷ்டமில்லை. ஜோதிமதியை மணஞ்செய்விக்க தங்களுக்கு இஸ்டமிருந்தால் செய்க அன்றேல் வாள்கொண்டு என்சிரசை வீசி கொன்றுவிடுக. இவ்விரண்டிலொன்று செய்தலே உத்தமமென்றான். சித்தர்உனக்குபுண்யமில்லா திருக்கையில் யான் எதுசொல்லினும் உன் செவிக்கேறாதென, அவன் காதில் ஓர் மந்திரத்தை யோதி மதனா ஜோதிமதி யணிந்திருக்கும் இரவுக்கையை கொண்டுவரச்செய்து அம்மணிமாடத்தில் வைத்து ஆயிரத்தெட்டுதரம் இம்மந்திரத்தை ஜெபித்து, அதன்மேல்கருப்புக்கோழியொன்றைக் காவு கொடுத்து, அவ்விரத்தத்தில் மூன்றுதுளி ரத்தம் ரவுக்கைமேல் விடு அப்போது அம்மணிமாடத்தில் கையிலிருக்கும் கோழியைவிசையாக எறிந்துவிட்டு நிமைப்பொழுது தங்காமல் நூறடி தூரம் விரைந்தோடி ஸ்தானஞ்செய்து வந்தால் அம்மணிமாடத்திலுற்ற பொருள்களெல்லாம் பொங்கும் அங்ஙனம் ஜோதிமதியை யழைத்தேகுவாயென ஆசிகூறி யனுப்பினர். இன்னும் வரும்.

வெண்சிலேடை பத்து.

நேரிசை வெண்பாக்கள்.

(விண்மீனும்-வேசியும்.)

இரவிலதி சோதியா யெல்லோர்க்கு மொன்றாய்
பரந்தமுகங் கொண்டேவரும் யாரில்—நரர்முன்
மதியுங் குறைந்திருக்கும் மாசும் படரும்
நிதம்வேசி விண்மீனும் நேர்.

(தேங்காயும்-மன்னவனும்.)

உள்ளே வெளுத்திருக்கும் ஊடரார்க் குயர்ந்திருக்கும்
கள்ளடக்கும் நல்ல கருத்திருக்கும்—ஒள்ளணியே
சீரார் முடியிருக்குஞ் சென்னி நிமிர்ந்திருக்கும்
ஏர்தெங்கு மன்னவர்க்குமே. 2

(சமுத்திரமும்-ஆகாயமும்.)

அம்பரமென் பேர்கொள்ளும் ஆதியிந்து வந்துசெல்லுஞ்
செம்மைசேர் மீனோடு சேதமுண்டு—அம்மகேள்
முந்தக் கடமாகும் முந்நீரும் வானகமு
மொத்ததென் றெஞ்ஞான்று மோது. 3

(பொன்னும்-திருடனும்.)

இரும்பறைக் குள்ளிருக்கு மேற்றவித மாக
வருமாதிப் பேர்வேறு மூரில்—திருத்தமுற
சால புடைத்தாலுந் தன்குணத்திற் குன்றாத
சீலப்பொன் கள்ளனுமே செப்பு. 4

(மன்னர் சேனையும்-தாமரையும்.)

தம்பிபல வந்திருக்குஞ் சொல்லரிய தண்டிருக்கும்
அம்புவியிற் றேனுங் களவில்லை—செம்மைசேர்
சூரன் றணைசெய்வான் தோணியுமே சேர்ந்திருக்கும்
நீரசமுஞ் சேனையுமே நேர். 5

(தாமரையும்-விளக்கும்.)

மெய்மறைந்து நீண்டிருக்கும் மேலே தலைதெரியும்
உய்யுமது ஆழத்தி லூர்புகழச்—செய்யதிறங்
காட்டி கனமடையுங் கஞ்சமலர் நெய்விளக்கும்
மேட்டிமையா யொன்றே விளம்பு. 6

(இரும்பும்-பாலும்.)

தீயினிடத் திற்காயுஞ் செப்புமைந் திற்சேரும்
ஆயின்வி லங்கோடே யார்ந்திருக்குஞ்—சேயிழையே
பற்பலவாய்ப் பேர்கொள்ளும் பாலுமிரும் பும்நேராம்
வற்புடனே யீண்டு வழங்கு.

(நவமணிகளும்-பெண்களும்.)

பொன்னணியுஞ் சேகரஞ்சேர் பூபாலர் தம்மிடத்து
மன்னுமது இன்றேல் மகிசிறப்பு—குன்றிவிடும்
நல்லதுணி கொள்ளும் நவமணியும் பெண்களுஞ்
சொல்லுவா மொன்றே துணிந்து. 8

(மல்லிகையும்-பெண்களும்.)

மாலதி யென்பர்காண் மன்றலுக்கு முன்னிருக்குஞ்
சாலவே நேசிப்பர் சக்கிரிகள் — ஞாலத்தில்
வாய்த்தமணத் தாலிதழ்கள் மாறுபடும் பெண்களுமே
தூய்மல்லி கையுமொன்றே சொல். 9

(யானையும்-கைகடிகையும்.)

முன்னேகை நீண்டிருக்கும் முக்கால முமசையும்
மன்னர்தம் வாசலிலும் வந்திருக்குஞ்—சொன்னமணி
வஞ்சணிகேள் நற்கொலுசு மாட்டிகொளுங் குஞ்சரமும்
அஞ்சாக் கடிகையு—மென் றென். 10

த. தாமஸ்.

இ ரங் கூ ன்

வர்த்தக அச்சியந்திர சாலை.

1909 (ஜூலை) ௴

இரங்கூனில் மங்குமாரிகதி 100-ம் நம்பர்கட்டிடத்தில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் வர்த்தவகை அச்சியந்திர சாலையின் (மர்க்கண்டயில் பிரஸ்) தலைவர்:—

ராய்ப்பகதூர்,

பெ. மா. மதுரைப்பிள்ளை அவர்களிடமிருந்து சித்திர உருவங்களோடு வரும்தேதி விபரங்களைக்காட்டும் பெரியபடம் ஒன்றும் சிறியபடம் ஒன்றும் கிடைத்தன. இவ்விரண்டின் வேலைப்பாட்டையும்பிரகாசத்தையும் பார்த்த உடனே இவைகளின் சிறப்பைச் சுட்டிக்கொஞ்சம் எழுதிவெளிப்படுத்த நமது நெஞ்சில் அவாவுதித்த படியே இதை எழுதலாயினோம். பெரியபடம் 2 அடி. 6 அங்குலம் நீளமும் 1 அடி ஆறங்குல அகலமும் கொண்டது.

இதில்பல விசித்திர வர்ணங்களுள்ள அரசாங்கசின்னமாம் எட்டுக்கொடிகளும் கிரீடமும் சிங்கமுக முத்திரைக் குறிப்பும் நால்வகைச் சேனைகள் அணிவகுத்து நிற்கும் திறமும் பார்ப்பவர் கண்களைக் கவர்ந்து மனோல்லாசத்தை யுண்டாக்குகின்றது.

மாட்சிமைதங்கிய நம்து சக்கிரவர்த்தியாக வேல்ஸ் இளவரசர் அரசியார் இந்தியா தேசத்து முக்கிய அரசர்கள்இவர்களை முன்பே நேரிற்பார்த்திருப்பவரும் இப்பொழுது பார்ப்பவரும் இவர்களை நேரில் நின்று சமீபத்தில மண்டல வட்டத்தில் காண்பதுபோலவே உருவங்கள் வெகுநேர்த்தியாய் முகச் சாயை உள்ளதுள்ளபடியே காட்டப்பெற்று விளங்கு கின்றது.

இப்படத்தைப் பார்ப்பவர் யாரும் இவ்வச்சியந்திரசாலையின் வேலைத்திறத்தையும் சாலைத்தலைவரின் மனோகர்மத்தையும்புத்தி நுட்பத்தையும் புகழாதிரார். ரவிவர்மாவின் படத்தின்சீர்இப்படத்தின் சீரின் முன்றலை நீட்டாதெனவும் கூறலாம். சூரியன் வான மண்டலத்தில் என்றும் மறையா தொளிரும் பூ மண்டலாதிபதி என்று படத்தின் தலைப்பில் நமது மாட்சிமை தங்கிய சக்கிரவர்த்தியின் மாட்சி அட்சரவரிசையில் தீட்டப் பட்டுள்ளது. மற்றொரு படத்தின்நீளம் 1 அடி 2 அங்குலம். அகலம்10 அங்குலம்

இதன்ஓர் பக்கம் தோகைவிரித்து நிற்கும் மயிலுருவமும் அதற்குமேல் ஓர்மாது அழகிய உடையோடு நிற்கும் உருவமும் பூங்கொடி களுக்கிடையில் விளங்குகின்றன. ராய்பகதூர்ஸ்ரீமது ரைப்பிள்ளையவர்கள் திருமுகத் தோற்றமும் அதற்கருகில் அவரது நண்பர்களின் உருவங்களும் காணப்படுகின்றது.

இதிலும்௵ மாதம் தேதிகள் மாசவரிசை காட்டப் பெற்றுள்ளது.

இதுவும் வேலைத் திறத்தையும் மனோபாவத்தையும் உணர்த்துகின்றது.

தமிழாபிமானியாய் தமிழையும் அதற் குழைப்பவர்களையும் பாவலர்களையும் உள்ளன்போடாதரிக்கும் நற்குணத்தோடு மானிடமர்ம சாஸ்திரம் முதலிய நூல்களையும் ரஞ்சிதபோதினி முதலிய பத்திரிகைகளையும் ஆதரித்து வருவதில் வேலைத்திறமும்

மதியூகமும் விளங்கும்படி செய்து வரும் இவ்வித்தியாத் தலைவர் வாய்த்திருப்பது ரங்கூனிலுள்ளாரும் தமிழ்நாட்டி லுள்ளாரும் எப்பொழுதும் மனதாரப் போற்றத் தக்கதேயாம்.

எல்லாம் வல்லபரம் பொருட்கு இவரது பதவியையும் சரீ ர சுகத்தையும் ஆயுளையும் நாள்தோறும் மேல்மேலாய்ஓங்கும்படி செய்வது சுலபமேயாம். வெகுஜனங்களுக் குபகாரியா மிவரை அவரெப்படி உபகரியாதிருப்பர். அவர் அப்படியே அருள்புரி வாராக.

இங்ஙனம்,

அவரது நண்பருள் ஒருவன்

தி. வேங்கடராம ஐயர்,

தமிழ்ப்பண்டிதர்.

சென்னை.

அத்துவித சித்தாந்தம்.

4 ஆம் பக்கத் தொடர்ச்சி.

ஜீவாத்மாக்கள் கண்டமேயன்றிப் பரிபூர்ணமல்ல. அதைப் பூரண மென்றொப்பி அத்துடனே சிவனையும் பூரணமென்று சொல்லிச் சிவனுக்கு வேறான ஆத்துமா பூரணமென்றும், அது ஆணவத்தால் மறைப்புண்டு ஏகதேசமாய் ஜீவத்துவத்தை யடைந்ததென்றும், அஞ்ஞானமுள்ளவரை யில் அப்படியே கண்டப்பட்டிருக்குமென்றும் பகர்ந்து, அதன்மேல் முத் தியில் ஜீவத்துவம் போய்ப் பூரண ஆன்மா வாகின்றதென்கிறார்கள். அத்துவித சித்தாந்திகளாகிய வேதாந்திகளோ பிரம சிவவடிவான பூரண ஆன்மா அவித்தையிற் பிரதிபலித்து ஜீவனாயிற்றென்றும் அந்த ஜீவனே பிறப்பிறப் பினையடைந்து முத்தியில் பூரணஆன்மாவாயிற்றென்றும் அந்த ஆன்மாவேதான் சிவனென்றும் ப்ரம்மமென்றும் சொல்லப்படுகிறதென் றும் சொல்லுகிறார்கள். இவ்விரண்டுமத சித்தாந்தமும் ஊகித்துணரா தார்க்கு வேறு வேறு போலத் தோன்றினும் ஊகித்துணரும் நுட் பபுத்தி யுடையார்க்கு ஒருவித சித்தாந்தமென்றே விளங்கும். இவ்விர ண்டுமத சித்தாந்தமும் பேதப்படுமிடத்தைக் கண்டுபிடிக்கவேண்டும். ஒரேபொருளுக்குச் சிவனென்றும் பிரமமென்றும் ஆன்மா வென்றுஞ் சொல்லுகிறார்கள். வேதாந்திகள்; மத சித்தாந்திகளோ, பிரமமாகிய சிவன் வேறு, ஆன்மாவேறு என்கிறார்கள். அதிலும் பல்கோடி ஆன்மாக்களை

ன்று சொல்லி அவைகளைத் தனித்தனிப் பூரணமென்றுஞ் சொல்லுகிறார்கள். இது சுருதி யுக்தி அனுபவ விரோதம். பிரமம் அல்லது சிவன் அல்லது ஆத்மாவென்னுஞ் சொல், கடவுளாகிய ஒரு பொருளுக்கிருக்க அதில் பிரமம் அல்லது சிவனாகிய இரண்டு சொற்களை மாத்திரங் கடவுளுக்குச் சொல்லி, ஆத்துமாவென்னுஞ் சொல்லை மாத்திரம் வேறுபொருளுக்கு அதாவது ஜீவாத்துமாவுக்குச் சொல்வது எப்படியிருக்கிறதென்றால் கை, கரம், அஸ்தம் என்கிற மூன்று சொற்களும் கையாகிய ஒரு பொருளுக்கிருக்க, அதற்குக் கை, கரமாகிய இருசொற்களைச் சொல்லி அஸ்தமென்கிறசொல்லைமாத்திரம் அதற்குச் சொல்லாமல் விரலுக்குச் சொல்வதுபோலிருக்கிறது. ஆத்துமா வென்கிற சொல்லை ஜீவனுக்குஉபயோகப்படுத்தப்படாதென்று யாம் பகரவில்லை: வேதாந்திகளும் ஜீவனுக்கு உபயோகிக்கிறார்கள்; சித்தாந்திகளும் உபயோகிக்கிறார்கள், அதுவரையில் இருவருமொருதன்மையராம். வேதாந்திகள் பிரமத்துக்கு அல்லது சிவனுக்கு அதை உபயோகிக்கும் போது, மதசித்தாந்திகள், அவர்களை ஏகாத்தும வாதிகளென்று இகழ்ந்து பேசுவதுதான் மதசித்தாந்திகள் பேரிலுள்ள பெருங்குற்றம்.

மதசித்தாந்திகள் பலகோடி ஆத்துமாக்கள் தனித்தனி பரிபூரணமென்று சொல்லி, அவைகளுக்கு வேறாகச் சிவன் அல்லது பிரமத்தையும் பரிபூரண மென்று சொல்வது யுக்தி அனுபவங்கட்கு விரோதம். ஒருபொருளின்கண் இன்னொரு பொருளிருத்தல் கூடாதே. அவர்கள் சொல்லுகிறபடி பரிபூரண ஆன்மாவின்கண் பரிபூரணபிரம்மம் இருத்தல் கூடுமோ? அதுதவிர ஒவ்வொன்றும் பரிபூரண இலக்கணமுள்ள பலகோடி ஆன்மாக்கள் இருக்கின்றனவென்று சொல்வது சரியல்லவே. ஒருபொருளினிடத்தில் இன்னொரு பொருளிருத்தல் நியாயவிரோதமாயிருக்கப் பலகோடி ஜீவான்மாக்கள் ஒன்றிலொன்றிருக்குமென்று சொல்வது ஒவ்வுமா? இவ்வளவு பேதைமையை தங்களிடத்தில் வைத்துக்கொண்டிருப்பதோடுபோகாமல் தங்களைப் பதிஞானிகளென்றும் வேதாந்திகளைப் பசுஞானிகளென்றுங் கூறுவது பொருந்துமா?

வேதாந்திகள் பந்ததசையில் நானென்பதற்குப் பொருள் ஜீவனையும் முத்திதசையில் நானென்பதற்குப் பொருள் பிரமம் அல்லது சிவன் அல்லது ஆன்மாவாகவுங் கொள்ள, துவிதசித்தாந்திகள் பந்ததசையிலானுஞ்சரி, முத்திதசையிலானுஞ்சரி, பிரமமென்றும், சிவனென்றுஞ் சொல்லப்பட்ட ஆத்தும சொரூபத்தையே நானென்பதற்குப் பொருளாகக்கொள்ளுகிறார்கள், முத்திதசையில் ஷை பிரமம் அல்லது சிவன் அல்லது ஆன்மாவை நானென்பதற்குப் பொருளாகக் கொள்வது சரிதான். இதைவேதமுதலிய நூற்பிரமாணங்களும் அங்கீகரிக்கின்றன. பந்ததசையிலும்அப்பொருளை நான் என்பதற்கு பொருளாகக் கொள்வது தான்

தவறு. இதற்கு நூற்பிரமாணங்களு மில்லை, வேதாந்திகளும் ஆன்மசிவப் பிரமப் பொருளையே பந்ததசையில் நானென்பதற்குப் பொருளாகக் கொள்ளுகிறார்க ளென்னின், அங்ஙனமில்லை யென்பதைக் காட்டுவாம். வேதாந்திகள் ஆன்ம சிவப்பிரமப் பொருள் அவித்தையிற் பிரதிபலித்த தென்றும் அந்தப்பிரதிபலன் வடிவமே ஜீவனென்றும் அந்த ஜீவன் அணு வென்றுஞ் சொல்ல, சித்தாந்திகள் ஆன்மசிவப்பிரமப் பொருள் ஆணவ மலத்தாற் கட்டுண்டு அணுத்தன்மை யடைந்த தென்றும் அந்தச்சமயத்திற்கு ஜீவன் அல்லது பசுவென்னும் பெயர் வந்ததென்றும் சொல்லுகின்றார்கள். வேதாந்திகள் ஜீவனைப் பிரதிபிம்பஸ்தானத்தில் வைக்கின்றமையால் ஜீவன்படும் ஜனனமரண துன்பங்களை ஜீவனேயனுபவிக்கிறான். பிம்பமான ஆன்மசிவ பிரமப்பொருள் அனுபவிப்பதில்லை. எங்ஙனமெனில், நீரிற் பிரதி பலித்த பிரதிபலன் சூரியன் அலைவானானால் அந்த அலைதல் பிரதிபலன் சூரியனுக்கே யன்றி பிம்பசூரியனுக்கு உண்டாகாது. இதைப் போலவே பிரதிபலன்சூரியனை யொத்த ஜீவன்படுந்துன்பங்களை ஜீவனனுபவிப்பானே யன்றி பிம்பத்தையொத்த ஆன்மசிவப் பிரமம் அனுபவியாது. சித்தாந்திகள் சொல்லுகிறபடி பார்த்தால் அவர்கள் ஜீவனை ஆன்மசிவப் பிரமப் பொருளின் பிரதிபிம்பமாய் ஒப்பாமை யானும் ஆன்மசிவபிரமப் பொருளை ஜீவனாகச் சொல்வதானும் ஜீவன்படுகிற துக்கங்களெல்லாம் ஆன்மசிவபிரமப் பொருளே படுகிறதாகச் சொல்லவேண்டியவர்களா யிருக்கிறார்கள். பிரதிபலனத்துக்கு வரும்லாபநஷ்டங்கள்பிம்பசூரியனைச்சாராததுபோல ஜீவனுக்குவரும் நயநஷ்டங்கள் ஆன்மசிவப்பிரமத்தைச்சாரா வென்க. இப்படிச்சொல்வதால் சித்தாந்திகள் பந்தத்திலும் முத்தியிலும் நானென்ற சொல்லுக்குப் பொருள்பரிபூரணப் பொருளான ஆன்மசிவபிரமப் பொருளென்றே சொல்லுகிறவர்களாகி ஜனனமரண சொர்க்கநரக பல இலாப நஷ்டங்களை ஷை ஆன்மசிவ பிரமப் பொருளே அனுபவிக்கிறதென்று சொல்லுகின்றவர்க ளாகவும், வேதாந்திகள் முத்தியில்மாத்திரம் நானென்கிற சொல்லுக்குப் பொருள்பரிபூரண ஆன்மசிவ பிரமப்பொருளைச் சொல்லிப் பந்தத்திலுண்டாகும் ஜனனமரண சொர்க்கநரக பல இலாப நஷ்டங்களை ஆன்ம சிவபிரமப் பொருளுக்குச் சம்பந்த மில்லாமல் ஜீவனேயனுபவிக்கிற தென்று சொல்லுகிறவர்களாகவு மாகிறார்கள்.

இன்னும் வரும்,

ஆத்மநேசன்.

முதுமொழிக் காஞ்சி.

சிறந்தபத்து.

"ஆர்கலி யுலகத்து மக்கட் கெல்லாம்
காதலிற் சிறந்தன்று கண்ணஞ்சப் படுதல்

இது இவ்வதிகாரத்தில் இரண்டாவது சூத்திரமாகும், இதன் கருத்தோவெனின் ஒருவர்தன்னை விரும்புவதினுஞ் அவர்கள்தான் விஷயமாக

பயப்படாதிருத்தலே யாகும். முன்சொல்லியிருக்கிற பிரகாரம் இதிலும்
தன்னைப்பிறர் விரும்புவதும் அவர்தன்மாட்டு பயங்கொள்ளா திருத்தலு
மாகிய இவ்விரண்டுஞ் சிறந்தன வெனக்கொள்ளப்பட்டு அதில்பின்னையதே
சிரேஸ்டமெனச் சொல்லப்பட்டது. பிறர்தன்னைக் காதலிக்கச் செய்யும்
காரியங்க ளெவைகளோ வெனின் முன் சூத்திரத்திற சொல்லியபடி ஒழு
க்கமே பிரதானமாகும், ஆனால் ஒருவர் மற்றவரை காதலிப்பதற்குநல்லொ
ழுக்கமே காரணமேயல்லாத மற்றவைகளும் காரணமாகு மன்றோ எப்
படியெனில் ஒருவர் ஓர் தப்பு செய்தபோது அவருடன் சேர்ந்த மற்றொரு
வர் அதை தப்பினால் தன்சிநேகிதர்க்கு நஷ்டம் நேரிடாதபடி தான் பொய்
முதலிய சொல்லியாவது செய்தாவது மேற்படி நஷ்டத்திலிருந்து தன்
சிநேகனைத் தப்புவித்தால் அப்படி தப்புவித்தவனை தப்புசெய்தவன் மிக
வும் விரும்புவனன்றோ. இஃது தக்கவிருப்பமா அல்ல. ஏனெனில் இருவரும்
துஷ்கிருத்தியங்களைச் செய்து விருப்பத்தை உண்டு செய்துகொண்டவர்க
ளாகையால் இம்மாதிரியான காதல் அல்ல. இங்கு கூறியது நல்லொழுக்க
த்தால் ஒருவரை ஒருவர் விரும்புவதே காதலாகும். ஏனெனில் இவ்வதிகா
ரம் சிறந்த பத்தாகையால் என்க. அன்றியும் துஷ்கிருத்தியத்தால் காதலித்
த இருவர் விருப்பம் அதிககாலம் நீடிக்காது என்றும் ஒருவர்க்கொருவர்
துன்பத்தையே விளைவிக்குமாகலின் இதனை நாலடியார்

"யானை யனையவர் நண்பொரீஇ நாயனையார்
கேண்மை கெழீஇக் கொளல்வேண்டும்—யானை
யறிந்தறிந்துப் பாகனையே கொல்லும் எறிந்தவேல்
மெய்யதா வால்குழைக்கு நாய்" என்பதால்.

உய்த்துணரலாம். ஆகவே பெருக்கமுடைய வொருவரிடத்து வைக்கும்
காதலினும் அவரிடத்துபயப்படாமையே சிரேஷ்டமென்கபயப்படாமை
க்குகாரணமும் உள நல்லொழுக்கமுடையவொருவன் விரும்பும்நல்லோனோ
தீயோனோ ஓர் குற்ற மிழைக்கின் அதனைக்கண்டித்து நமக்குத் தீங்கு செ
ய்வார் என்பதொன்றாகும். கண்டித்து நல்வழி நடத்துவது கடமையே
யெனினும் தீங்கு செய்யாமை பெருங்கடமை யென நல்லொழுக்கமுள்ள
ஒவ்வொருவரும் அனுசரிக்கவேண்டியது. எல்லா விஷயங்களிலும் நல்
லொழுக்கமுள்ள சிலரும் கண்டிப்பாக இருக்கப்பார்த்து மற்றவர்க்குத்
தீங்கு செய்யும் குற்றத்துக்குள்ளாகினார்கள். இக்குற்றமும் இல்லாதிரு
க்கும் நல்லொழுக்கத்தவரே சிரேஷ்டமாக விரும்பப்படுவர் என்ப திதன்
திரண்ட பொருளாகும், இப்பாட்டில் காதல் என்பதற்கு தன்னை பிறர்
விரும்புவது எனப்பொருள்கொண்டோம் காதல் என்பதற்கு தன்னைத்
தான் விரும்புவது எனப் பொருள் கொண்டாலும் பொருந்தும். அப்போது
தன்னை விரும்பும் ஒருவர் தன் நலத்தைக் கருதும்போது பின்னால் துன்ப

தீமைச் செய்யக்கூடும் தீதினையைச் செய்து தனக்குத்தானே அஞ்சப்படும் நிலைமையை யடையாதிருப்பது மேன்மை என்பது பொருளாகும். இதனை நாயனார்.

"தன்னைத்தான் காதல னாயினெனைத் தொன்றுந், துன்னற்க தீவினைப் பால்" என்னுந்திருவாக்கால் அறியலாம்- அன்றியும்

"காதலிற் சிறந்தன்று கண்ணஞ்சிப் படுதல்" என்னும் ஓர் பாடமுண்டு. இதன் பொருளாவது தான் மற்றவர்களை விரும்புவதினும் மற்றவர்களுடைய துன்பத்தின்கண் தான் அஞ்சி நடத்தல் என்பதே. இப்பாடம் மகாசிரேஷ்டமே அநேகர் தம்மோடு கல்வி செல்வமுதலியவற்றில் ஒருபடித்தாயுள்ளவரைக் கண்டபோது விரும்புகின்றாரெனினும், அவர்கள் தம்மினும் சிரேஷ்டமாகப் பிறராற் கருதப்படுவதாகக் கண்டபோது மனம் பொறாராய் அவர்கருத்திற்கு செய்வனவாகிய எண்ணங் கொண்டவராய் தாமே நேராக துன்பம் இழைத்தால் உலகம் வசைசெய்யும் எனக் கருதி சும்மா இருந்து அவர்க்கு இவர் இச்சைப்படி துன்பம் வந்தபோது தாம் சந்தோஷப்படுகின்றனர். அக்காலத்தும் தாம் துன்பப்படுபவர்க்காக இரங்குவதாகவும் வேஷங்காட்டுகின்றனர். இதனைக்கண்டித்து ஒருவரை ஒருவர் விரும்பாமையினும் அவர்க்கு நேரும் தீங்கின்கண் வெறுப்படைதலே மேன்மை எனக்கூறப்பட்டது இதுவே இரண்டபொருளுமாகும்,

'மேதையிற்சிறந்தன்று கற்றதுமறவாமை' என்றது அறிவுடைமையால் அறியுமறிவைப்பார்க்கினும் கற்றவைகளை மறவாதிருத்தல் சிறந்தது என்பது பொருள், இதில் அறிவுடைமை கற்றது மறவாமை ஆகியஇவ்விரண்டு நல்ல விஷயங்களில் பின்னதே மேன்மையெனக் கொள்ளப்பட்டது. தானாகவொன்றை அறிவது சிரேஷ்டமென்பதை ஆக்ஷேபிப்பார் ஒருவருமிலர். ஆனால் அவ்வாறு அறிந்தனுபவமாகக் கற்றதை மறந்து விடுதல் துக்க நிவர்த்திக்கும் ஆகந்த பிராப்திக்கும் ஏதுவாகாதாகையால்அப்படி மறவாது சுய அநுபவமாகக்கொள்ளப்பட்டு துன்ப ரகிதமாக யுள்ளதைக் கடைபிடித்தல் மேன்மையெனக்கொள்ளப்பட்டது. பொய்சொல்லல்தீங்கு என்பதைச்சுவாநுபவமாகவும் மற்றவரிடத்தும் தான்அநுபவமாகக் கண்டும் கற்று இதனைமறந்து சமயத்துக்கு மாத்திரம் நிலையில்லா இன்பத்தையும்பிறகு நிலையுள்ள துன்பத்தையும் கொடுக்கக்கூடிய பொய்யைச்சொல்லல்எவ்வளவு கேவலமென நண்பர் அறிவர். அவ்வாறே எல்லாஉலகவொழுக்கங்களிலும் இதனைக் கூட்டிப் பார்க்கஅப்படியே பரிபூரணன் அகண்டன் அரூபி கடவுள் எனவாசித்தும், கண்டப்பொருள்களெல்லாம் பூரணத்துவத்தையுடையன வல்லவென விசாரணை முகத்தால் அநுபவமாக அறிந்தும், அதனை மறந்தும் தன் வயிற்று பாட்டுக்காக வேண்டியும் உயர்வு தாழ்வு என்பதை வளர்த்து அதனால் தான் மேன்மையடைய வேண்டும்

னென்னும்கொள்கையுடையராய்உண்மையைவிட்டுப்பொய்யையேபோதித்து தாங்களும் துக்கம் நீங்கிலராய் பிறர்க்கும் துக்கம் நீங்கும் மார்க்கத்தை தடுக்க முயன்று திரிபவரில் சிலர், சிவன் விஷ்ணு தேவன் முதலியோர் முறையே கைலாயம் வைகுண்டம் பரமண்டலங்களில் தான் கைகால் முதலிய அவயவங்களோடுகூடிய கண்டப்பொருள்களாகவும்ரூபிகளாகவும் உள்ளார் எனச்சொல்லி முன் தாங்கள் விசாரணையாலடைந்ததை மறந்து மாறுந்துக்கத்தில் தாமழுந்தி பிறரையும் அழுத்த வழிதேடுவதெவ்வளவு கேவலத்திலும் கேவலமென்பது சொல்லாமலே விளங்குமன்றோ. இவர்களுடைய அறிவு, அறிவு என்னும் பெயரைக் கொளற்குரியதோ, உரித்தானாலும் அறிவின்பயனும்துக்கநிவர்த்தியும், ஆநந்தபிராப்தியுமுண்டாகுமோ ஒருக்காலுமில்லை; ஆகவே அறிவாற் சுவாநுபவமாகக் கண்டதை பொய்யாம் சுகத்தைநாடி மறந்து விடுவது மகாகேவலமென்பது கொள்ளப்பட்டுள்ளது. இதனையன்றோ நாயனார்,

"ஓதி யுணர்ந்தும்பிறர்க்குரைத்தும்தானடங்காப்பேதையிற்பேதையில்" என்னுங்குறளுள் தானடங்கா என்னும் சொல்லால்மிகவும் வற்புறுத்தியிருக்கின்றார்.

கோ. மு. (தொடரும்)

ஆங்கில அரசாட்சி.

நமது காருண்யம் பொருந்திய கவர்ன்மென்டாகும் இங்கிலீஷ் அரசாட்சியின் கீழ் இந்தியா நிலைத்த காலந்தொடங்கி தூரதேயசமாச்சாரங்களை அந்தநிமிஷத்திலேயே அறிந்து கொள்ளதந்திமார்க்கங்களுண்டாக்கியிருப்பது போல, சற்றுதாமதமாய் சுலப கட்டணத்தில் ஒருவர்க்கொருவர் க்ஷேமலாப முதலியவைகளை யறிந்துகொள்ள தபால் மார்க்கமேற்படுத்தியிருப்பது பிரஜைகளுக்கு எவ்வளவோ நன்மைபயக்குவித்திருக்கின்றது. அவ்வாறு ஏற்படுத்திய அத்தபால் இலாக்காவில் பிராமணருக்கு ஓர்சட்டம் சூத்திரருக்கு ஓர்சட்டம் க்ஷத்திரியருக்கோர்சட்டம்வைசியனுக்கோர்சட்டமென்பதாகவும் மற்றும் பறையர் பள்ளிகளுக்கு ஓர் சட்டமுண்டென்றும் மற்றும் குறவர் மறவர்களுக்கு ஓர் சட்டமுண்டென்றும் பாகு பாடில்லாத நமது ஆங்கிலஅரசியலில் சாதாரணமான சென்னை முதலிய நகரவாசிகளாகியபறையர்களுக்கும், ரையில்வேஸ்டேஷன்களை யடுத்து சற்று விவகாரங்களை அறிந்திருக்கும் பறையர்களுக்கும் தபால் மார்க்கமாக வரும் கடிதங்களை அப்போதைக்கப்போது டிலிவரி தவிராமல் கொடுத்துவிடப்படுகிறது. ஆனால் சற்று ரையில் ஸ்டேஷன்களுக்குத் தூரமாகவும் குக்கிராமங்களாகவுமுள்ள பறச்சேரியிலிருக்கும்

ஏழைபறையர்களுக்கு எந்த விவகாரமாகவும், எவ்வளவு அவசரமாகவிருந்தாலும் அந்த கடிதங்கள் பறச்சேரிக்குப் போகவேண்டியதென்று தெரிந்ததும், அசட்டைசெய்து அப்புறம்போட்டு வைக்கிறது போஸ்டுமாஸ்டருடைய தர்க்குணமாகவும், முதற்கோணல்முற்றுங்கோணல் என்று அவரிடமிருந்து கஷ்டத்துடன் போஸ்டு பியூன் கைக்குவந்தால் அவர் இது என்ன சனியனென்று முறுமுறுத்து பறச்சேரிக்குள் எப்படி சென்று இதை கொடுப்பது இன்னொருசமயம் பார்த்துக்கொள்ளலாமென்றுதனது சொந்த விஷயத்தைக் கவனித்துப் போகிறதும், அப்படிக்கில்லாவிட்டால் கிராம முனிசிபு வீட்டண்டை தலையாறி வெட்டிகள் வந்தால்அவர்களிடம் கடிதாசியைக்கொடுத்து இந்த வீட்டிலிருக்கும் இன்னானுக்குக்கொடுத்துவிடு என்று கொடுத்துவிட்டுப்போகிறதும், அவ்வெட்டித் தலையேறிகள் தமது மடியில் வைத்துக்கொண்டு கிராமாதிகாரிகளுக்குப் பயந்து அவர்களிடம் வேலையைச்செய்து முடித்து பசிம் ஆயாசத்தினால் ஊரைச்சுற்றி வீடுசேர்ந்ததும், இந்தகடிதாசியை முற்றிலும் மறந்து விடுகிறார்கள், தங்கள் வட்டுகம் என்னும் பையிலேயோ, தலைகுட்டையிலேயோ முடிந்து வைத்திருக்கும் அந்த கடிதாசி முதலாளிக்குச் சேருமுன் செக்கிலகப்பட்ட எள்ளாய்விடுகிறது. அப்படியானாலும் அன்றாவது மறுநாளாவது சேருகிறதா என்றால் இல்லை. இவன்வீட்டில் தூலத்துமேல் வைத்துவிட்டு பெண்டாட்டியைக் கூப்பிட்டு அடி! தூலத்துமேலே ஓர்காயிதம் வைச்சே அதை குனுனத்தூர் கங்கனிடம் கொடுத்துடு என்று வந்துவிடுகிறது. அவள் கொடுத்தாலும் கொடுத்தாள் இல்லாவிட்டால் மறந்தாலும் மறந்துவிடுவாள். இப்படி ரெண்டுநாள் போனதும் காகிதம்பெறவேண்டிய கங்கனோ முத்தனோ, குள்ளனோ வழிபாட்டையில் போகிறகாலத்தில் போஸ்டுபியூன் கண்டால் ஏண்டா! உனக்கு ஓர் கடிதாசி வந்ததே வாங்கிக்கொண்டாயா என்று கேட்கிறது. பாபம் அவ்வேழைப் பறையன் சாமி இல்லியே சாமி, எப்போது வந்தது? எங்கூர்லே யிருந்து வந்ததாங்காட்டு. எங்கம்மாபுள்ளே அந்த சீமைக்குப்போனானே சிங்கப்பூருக்குப் போனானே அவங்கிட்டயிருந்து வந்ததாம் காட்டும். எங்கே சாமி காயிதம் என்ற மாத்திரத்தில், ஐயா போஸ்டுபியூன் சிறிப்பாகச் சிறித்து இது வெளிக்குவந்தால் தன்னைச் சிறிக்கிறதறியாமல் அடே அங்கே எங்கேயுமிருந்துவரவில்லேடா, கிட்ட எடத்திலிருந்து வந்ததடா, என்றதும் அமா சாமி அப்படியானா பட்டணத்திலே எங்க சின்ன கொயந்த இருக்கிது அது கிட்டிருந்துவந்துதாங் காட்டும் நான்போய்தலையேறிமுத்தனிடம் வாங்கிக்கிறேசாமி நீ போங்க. என்று திரும்பிவந்து தலையேறியைக்கேட்டால் ஆமடா கொயந்தே வூட்டிலே குப்பிகிட்ட கொடுத்துவிட்டு வந்தே வாங்கிக்கடா என்பதும், அவன் குப்பியைக் கேட்டால் ஆங்கா அண்ணே ஏத்து ஓங்கமைச்சா கொடுத்தாங்கோ மணைக்கட்டை.மேலே வைச்சிட்டு கஞ்சி கொண்டுபோனே பசங்க எடுத்து வெள்ளாடி சிழிச்சுப்போட்டிருக்குங்கோ

காவென்ன பண்ணுகிறது என்கிறதும், சிலசமயங்களில் சேருகிறதும் சிலசமயங்களில் 4 நாள் பொறுத்து 5 நாள் பொறுத்து சேருகிறதும் முதலே சங்கதி தெரியாத போகிறதும் வெகுவாகக் கேள்விப் பட்டும், நேரில் கண்டுமிருக்கிறோம் திருஷ்டாந்தமாக எமது அன்பர் ஒருவர் சென்னைக்குச் சற்று தூரமாயிருக்கும் தையூர் பறச்சேரிக்கு அவசரமாக எழுதியகார்டு சேரவேண்டிய நாளுக்கு 8 நாள் பொறுத்து சேர்ந்தது. இவ்வளவு சமீபமான இடத்திலேயே இப்படி நடத்தினால் இன்னும் தூரமிருக்கும் கிராமங்களுக்கும் பறச்சேரிகளுக்கும் இன்னும் தூரமான கொல்லைக்குடியராகிய குறவர்களுக்கும் எந்தவிதமாகச் சேரும். இந்த போஸ்டில் அனியாயத்தை போஸ்ட் மாஸ்டர் முதலானவர்கள் சீர்தூக்கிப் பார்த்து நடத்த நமது காருண்யம் பொருந்திய கவர்ன்மென்டார் தமது செங்கோலாட்சியின் கீழுள்ள அந்தபாகத்தைக் கண்ணோக்கி ஜன சௌகரியத்தை யுண்டாக்கி யின்னும் செங்கோலோங்கி வாழ்வார்களாக. இவ்வாங்கில அரசாட்சியிலேயே பறையர்களாகும் பகுப்பாரை இந்த தபால் இலாக்காவில் இப்படி கவனிப்பார்களானால் இந்தியர்களுக்குச் சுயராச்சியம் கொடுத்துவிட்டால் என்னதான் செய்யமாட்டார்கள் அந்தோ அனுமார் வாலைநீட்டி இலங்கையைக் கொளுத்தியது போல ஜாதிகட்டை அவிழ்த்துநெல்லிக்காய்மூட்டையாகப்பரவ விட்டு அநியாயம் செய்வார்களென்பதற்கு என்ன ஐயமுண்டு. அரசாட்சியாரும் லார்ட்மார்லியும் கவர்னர் ஜெனரல் அவர்களும், தபால் பெரிய உத்தியோகஸ்தர்களும் இதைக்கவனிக்க வேண்டியது.

கவர்ன்மெண்டாரே! தமக்கு தூஷணையாக எழுதிய பத்திராதிபர்களையும் ராஜதுரோகிகளையும் தண்டிக்கமுயன்று டிரான்ஸ் லேற்றர்களைக் கொண்டு குற்றம்கண்டு பிடிப்பதுபோல் இந்த அதிமுக்கிய வியாசத்தினும் அன்பான டிரான்ஸ் லேட்டர்களின் உபகாரத்தால தெரிந்து ஆதரிக்க பிரார்த்திக்கின்றனன்.

அவதானியார்.

மகாமகம்.

1909ஹு மார்ச்சுமீ 6உ கும்பகோணத்தில் மகாமகம் விமரிசையாய் நடைபெற்றது. இந்துக்களுக்கு மிக்க நன்னாளாகிய வின்று அமுதவாவியாகிய மகாமகத்தில் ஸ்நானஞ்செய்வோர் சகல பாவங்களும் நீங்கி மோட்ச மனுபவிப்பார்களென்பது புராண சித்தாந்தம். இம்மகாமகம் பனிரண்டு வருடங்களுக்கொருமுறை பிரகஸ்பதி சிம்மராசியில் சஞ்சரிக்கும்போது சூரியன் கும்பராசியிலிருக்க சந்திரன் குருவுடன் சேருவதாகிய

மாசிமாத பௌர்ணமி திதியேயாம். இக்கால் லக்ஷங்கணக்கான பக்தர்கள் குடமூக்கின் வழியாக அமிர்தம்பரவிய கும்பகோணத்தில் கூடிநின்றனர் இதற்கு பல்வேறு காரணங்களிருப்பினும் ஓர் விஷயமட்டும் சொல்வாம். பிரளயகாலத்தின் பின் சிருஷ்டிப்பதற்கு வழியுணராத நான்முகன் சிவபெருமானிட விண்ணப்பித்துக் கொள்ள அவராக்ஞையின்படி அமிர்தமிட்டுப் பிசைந்த ஒருகலசத்தில் அமிர்தமூற்றி,மண் சேர்த்து சிருஷ்டி பீஜத்தைப் புகுத்தி சுற்றிலும் வேதம், ஆகமம், புராணம், இதிகாச முதலியவற்றைவைத்துப் பின்னும் அமிர்த மூற்றிமகா மேருவின்தென்பால் அக்கும்பத்துக்கு நூல், மாவிலை, வில்வம் சந்தனம் முதலியன சாற்றி பூஜைசெய்து உறியின் மீதுவைத்தனர். பிரளயகாலத்தின் பின்னர் இவ்வுறிதென்றிசை நோக்கிச் சென்றது. அவ்வாறு செல்லுங்கால் தருப்பையும் மாவிலையும் ஒருவிடத்தில் விழ அவ்விடம் சபிவனமும் அங்குமுளைத்தலிங்கம் தருப்பைலிங்கமுமாயின. கலசத்தைச் சேர்ந்த உறியும், தேங்காயும் பூணுநூலும் விழுந்த இடங்களிலும் சிக்கேசரும், நாரிகேளேசுரரும், யக்ஞோபவிதரும் தோன்றினார்கள். பின்னர் பரமசிவமே இக்கலசத்தைப் பார்க்கவேட்டுரு கொண்டு திருவிடை மருதூருக்குக் கீழ்பக்கத்தில் நின்று மேற்றிசையில் கும்பம் தெரிவதைப் பார்த்து எய்த அம்புகலசத்தின் மூக்கை யுடைத்து கவிழ்த்துவிட்டது. மூக்கு உடைந்து விழுந்த இடம் குடவாயிலாயிற்று. சிவபெருமானிருந்து பாணம் விட்ட இடம் பாணபுரியெனப் பெயர் பெற்றது. அக்குடத்திலிருந்து வெளிப்பட்ட அமிர்தம் இரண்டு வாவிகளாகப் பிரிந்து பொற்றாமரைத்தீர்த்த மென்றும் மகாமகதீர்த்தமென்றும் பெயர்பெற்றன. அப்பால் பரமசிவம் சமீபித்துச் சென்று அமிர்தத்தால் நனைந்த மண்ணைப் பிசைந்தெடுத்து ஓர் லிங்காதாரமாக்கி குடமூக்கின் வைத்துப் பூசை செய்து தேவர்கள் பார்த்துக்கொண்டிருக்க அவ்விலிங்கத்துடன் மறைந்து அமிர்தலிங் கேசர் என்னும் பெயரைப்பெற்றார். தேவர்களுடைய ஆழ்ச்சியின்படி உமாதேவியாரை அந்த லிங்கத்துக்கு இடபாகந் திலெழுந்தருளச்செய்து, மங்களநாயகி என்னும் பேராலழைத்தார்கள். அதன்பின்னர் பிரம்மதேவர் ஸ்வாமிகளுக்கும் அம்மையாருக்கும் ஆலயம் சமைப்பித்து ஒன்பதுநாள் உற்சவங்கொண்டாடி பத்தாவது நாள் அமிர்தவாவியுள் நீராடி

மகாமக தீர்த்தத்தில் ஸ்வாமியைத் தீர்த்தங்கொடுக்கச் செய்தார். திருவிடைமருதூர், திருநாகேசுவரம், ருத்திராக்ஷவனம், சுவாமி மலை பாடலவனம் ஆகிய பஞ்சக்ஷேத்திரங்கள் இக்கும்பகோணத்தைச் சுற்றி லுமிருக்கின்றன. பிரமதீர்த்தமுமுண்டு. அட்டதிக்குப் பாலகர் பேராலும் நதிகன்னியர் ஒன்பதின்மர் பேராலும் தீர்த்தங்களுண்டு. இன்னும்பலதீர்த்தகோடிகளுமுள. இன்னும் பல வளமும் பூசித்த அன்பர்களுக்கு முத்திப் பேற்றினையுமளிக்கு மித்தலத்தில் நடைபெற்ற மகாமகத்திற்கு இமயமுதல் சேதுபரியந்த முள்ளவர்களும், சிங்கப்பூர், பினாங்கு, ரங்கோன் முதலிய தூரதேசத்திலுள்ள சைவசிகா மணிகளும் கோடிகணக்கான ஜனங்களும், அநேகமடாதிபதிகளும் ஜமீன்தாரரும் விஜயமா யிருந்தார்கள். ஜன நெருக்கமோ சொல்லத்தரமன்று எவ்வகை கஷ்டங்களை யடைந்தாலும் அக்காலத்து தீர்த்த ஸ்நானமும் ஸ்வாமி தரிசனமும் அதிக முக்கியமானதே யாகுமென பக்த சிரோமணிகள் பாவிக்கின்றார்கள். சைவ சித்தாந்திகளின் ஒருமைப்பாட்டிற்கு இஃதோர் சிறந்த வைபவக்காட்சி யேயாம்.

விகட வினோத விஜய வியாஸம்.

ஓர் சாமியார் நெடுநாளாக யோகஞ்செய்வதாக ஊர்ப்புரளி செய்து வந்தும் சையோகமே செய்து பன்றிபலகுட்டி யெனப் பயின்று சற்று அதுவிஷயத்தில் வெறுப்புண்டாகி தமக்குச்சமுசாரதொல்லை இனி வேண்டியதில்லை எனத்துறந்து நடித்துவந்தார். என்னசெய்வார் இத்துறவி என ஏங்கிய தனதுமாது பழய வழக்கத்தின்படிதனக்கு தேக இன்பசுக மில்லாது அயர்ந்து இனிசாமியார் நமக்குதவார் எனவேறுசுகம் தேடினளாம். இதையறிந்த சாமியர் ஏ! பெண்ணே என்னநான் உன்னைத் தொடாமலிருந்தும் நீஎப்படிகர்ப்பவதியானாய்? இவ்வாறுசெய்யலாமா வென்றார். உடனேநாயகியானவள் மாமா! ஒருவனுக்கு நிலமில்லாமல வித்துள்ளவனாயிருந்தால் மற்றொருவனையடைந்து உன் நிலத்தில் நான்பயிரிடுகிறேன் அப்பயிர் நம்மிருவருக்கும் பொதுவாயிருக்கட்டு மென்று ஏற்பாடுசெய்துக் கொண்டு பயிரிடுகிறதுபோல் ஒருவன்மனையாளிடத்தில் மனையாளில்லாத மற்றொருவன் பிள்ளையையும் உண்டுபண்ணலாம் என்று நமது

ஆதினசாவ்ஸதிரமாகியநீதிவாய்ந்த மனுநீதி சாஸ்திரம்ஒன்பதாவது அத்தியாயம் 52-வது வசனத்தில் கூறியிருப்பதைத் தாங்கள் நன்குணர்ந்தவராயிருந்தும் அதன்படி செய்த என்னைத் தாங்கள் கண்டிப்பது நியாயமல்லவேயென்றாள். இது எப்படித் தெரியுமெனக் கேட்டார் பின்னும் ஓர்நாள் தாங்களே பிரசங்கத்தில் சொன்னதுபோல் செய்தேனென்றாள் உடனே சாமியார் தடியெடுத்து ஊருக்குச் சொன்னேனு உனக்குச் சொன்னேனு? என நையப்புடைத்தார் உடனே மாதுபாழாப்போனமனுசாஸ்திரமே உன்னைநம்பி இம்மாதிரியானேனே! என்று கூக்குரலிட்டு தர்மசாவ்ஸதிரத்தின்படி நடந்தஎனக்கு குற்றமுண்டானதித்திருமபஸ்வாமியாரிடத்தில் மன்னிக்கக்கேட்டுக்கொள்ள சுகபோகத்திலிருந்தாராம்.

மகாமகம் சேர்வைக்காக வம்வ்லநானத்திற்காகவும்கும்பகோணத்தில் கூடிய திரண்ட ஜனத்திரளால் கும்பகோணம் நம்புகழ்ன்று அல்லோகலப்பட்டு சேனுசமுத்திரமாகிய ஜனசமுத்திரத்தைக்கவிழ்த்து விடப்பார்த்ததாம். உடனே பூமிதேவியானவள் தனது கஷ்டத்தை ஆதிசேடனிடஞ் சமர்ப்பித்தனளாம். ஆதிசேடன் தனது எலும்பில் ஒன்றேனும் பழுதுபடாதிருக்க நெளித்து நெளித்து முக்கிமுரடி தூக்கி சனிவாரமுழுதும் சுமந்து சனிபோன்மறுநாள் ஒருசனிவிட்டது மாகாதேவா வென்று சற்று சுமைகுறையுவும், இந்த கஷ்டத்தைப்பார்த்த ஆதிசேடன் வருகிற 12ஆவதுமாகாமகமட்டும்யாமிருக்கப்படாது. அப்போது இதனிலும் கஷ்டமிருக்கும் இதற்குள்ளாக பென்ஷன் வாங்கிக்கொண்டு விஷ்ணுவின் நித்திராசனமாக பாற்கடலிலிருந்தால் வேண்டும்போது பாலைப்பருகியிருந்து விடலாம் இனிபூமியைத் தூக்கிச் சுமக்கும் வேலை நமக்குவேண்டாமென்று பூமாதேவிக்கு ஓர் விண்ணப்பமும் தற்சமயமும் பஞ்சவைக்குறைக்கவாக்கிபேதிமாரியத்தாளுக்கு ஓர் விண்ணப்பமும் எழுதியனுப்பிவிட்டாராம்.

புத்தகவரவு.

வால்மீகி ராமாயண வசனச்சுருக்கம்:— இந்நூல் ஜாகீர் ஆரணி ஸ்ரீமான் ஸ்ரீராமமந்திரம் தர்க்காபிரசாத் சுவாமிகள் மாணவர்களிலொருவராகிய ஸ்ரீமங்க வே. அருணகிரிமுதலியாரவர்களால் வால்மீகி மகாமுனிவராருளிய இராமாயணத்திலிருந்து சொற்சுவைமலிய, பொருட்சுவைமலிய உலோபகாரமாக எழும்சதைத்தெள்ளிதிலுணர்த்துவான்வேண்டிமிகசுருக்கமாகவெழுதப்பட்டு, அட்சரப்பிழைகளின்றி சுத்தமாகப்பிரசுரித்துள்ளது. இந்நூலை நம்பார்வைக்கனுப்பிய ஷை நூலாசிரியருக்குக் கைம்

மாருகப் பன்முறையும் வந்தனஞ் சமர்ப்பிக்கிறோம். விலை அணா 0—1—6 சொற்பமே. அவரது விலாசம் 499, சுண்ணாம்புக்காரத்தெரு, கொசப்பாளையம், ஆரணி. வேண்டுபவர் எழுதிப் பெறலாம்.

ஆங்கில அரசில் சகலவருணத்தினருக்குமேற்படுத்திய

விவசாய பாடசாலை.

ஜூன் மாதத்தில் விவசாய பாடசாலை கோயம்பத்தூரில் திறக்கப்பட்டது. சைதாப்பேட்டை விவசாய பாடசாலையினால் மாணாக்கர்களுக்கு உபகார சம்பளம் கொடுத்ததுபோல கோயம்பத்தூர் பாடசாலையில் கொடுக்கப்படாது. ஆனால் மாணாக்கர்கள் வசிக்கும் இடங்களுக்கும் அவர்களை படிப்பிப்பதற்கும் கட்டணம் ஒன்றும் கட்டவேண்டியதில்லை. மாணாக்கர்கள் தங்கள் சாப்பாட்டுச்செலவை தாங்களே செய்துகொள்ளவேண்டியது. பிரவேசத்திற்கு அனேக விண்ணப்பங்கள் வந்தன, ஆனால், பாடசாலைத் தலைவர் 22 மாணாக்கர்களை மாத்திரம் சேர்த்துக்கொள்ளக்கூடியவரானார் இவர்களில் 14 பேர் மெட்ரிகுலேஷன் பரீக்ஷையில் தேர்ந்தவர்கள். மீதி 8 பேர் பாடசாலைத் தலைவருடைய நற்சாக்ஷி பத்திரிகையினால் பரீக்ஷையில் தேர்ந்தவர்களாயிருக்க வேண்டுமென்னும் விதியிலிருந்து கவர்ன்மெண்டாரால் முக்கியமாய் நீக்கிவிடப்பட்டார்கள். மாணாக்கர்களை விவசாய பாடசாலைக்கு பொருக்கும்போது பாடசாலைத் தலைவருடைய முக்கியகருத்து என்னவென்றால் பயிராளிகளுடையவும் விசேஷநிலங்களை உடையவர்களுடையவும் பிள்ளைகளுக்கு பண்ணையில் உயர்ந்த விவசாயத் தொழில்களைக் கற்பித்து அத்தொழில்களை தங்களுடைய நிலங்களில் உபயோகப்படுத்தும்படி செய்வது. ஒவ்வொருமாணாக்கனும் தானே நிலத்தை உழுது, விதை விதைத்து, கிருஷிகனைப் போல் ஒவ்வொருநாளும் செய்ய வேண்டிய வேலைகளை யெல்லாம் செய்துவரவேண்டும் அப்படி செய்வதினால் அவன் பிறகு தன் குடியானவர்களுக்கும் கூலிக்காரர்களுக்கும் கற்பிக்கக்கூடியவனாவான். இந்தக் காரணம்பற்றியே தேகசவுக்கியமும்பலமுமுள்ள மாணாக்கர்களை பாடசாலையில் சேர்க்கிறார்கள். மாணாக்கர்கள் வசிப்பதற்காக ஒவ்வொரு வீட்டில் ஆறு மாணாக்கர்கள் வசிக்கும்படியான பத்து வீடுகளை கட்டும்படி சர்க்கார் உத்திரவு செய்திருக்கிறார்கள். ஆகையால், எல்லாவித ஜாதிமாணாக்கர்களுக்கும் தாங்கள் வசிப்பதற்கு தகுந்த இடமுண்டு.

சென்னை,
1908-௵ ஜூலை-௴-6உ

எம். இ. கௌச்மான்,
அக்ரிகல்சர் டைரெக்டர்.

கண்டோர் காதலிக்குங் காலண்டர்கள்.

இக்காலண்டரைப்பற்றி முகப்பிலேயே நமது நண்பரால் எழுதப்பட்டிருப்பினும் நமது கைக்குவந்த அவ்வருமையான காலண்டர்களைப் பற்றியாமெழுதவேண்டியது கடமையாதலால் சிறிதெழுதுவாம் ராஜரீக விஷயத்திலும் தமிழைப்போற்றி வளர்க்கும் புண்யவிஷயத்திலும் கற்றாரைக் காப்பாற்று முதாரகுணத்திலேயும் மற்றும்பல விதத்திலும் தனக்குமுன்னும் பின்னுமாக இவரென்று குறிக்கப்படாத மேம்பாடான பெருமானாகிய இராயபாஹதூர், பெ. மா. மதுரைப்பிள்ளை யவர்கள், எம்பாலன்பு பாராட்டி யனுப்பிய காலண்டர்களிரண்டும் பெற்றேம், சிறியது ஒன்றும் பெரியது ஒன்றும் வித்யாசமான வகையாய்க் காணப் பெற்றன, அவற்றுள்

1—சிறியது:— பலநட்சத்திரங்கள்நிறைந்த ஆகாயத்தினிடத்தே ஓர் சந்திரன் றோன்றியதொப்ப (அவருடையசம்பனியின் கட்டடங்களினூடே மற்றியாவரும் ஒன்று சேர்ந்திருக்கும்வண்ணம்) அவருடைய பிரதிபிம்பதற்சொருபப்படமொன்றமைக்கப் பட்டுள்ளது. மதுரை பிரதர்ஸ் அண்டுகம்பனிஎன தீட்டப்பட்டுள்ளது இக்கம்பனியாரோ, கப்பல் துபாஷிகள், ஸ்டிவிடோர்கள், ஏஜெண்டுகள், ஜெனரல் ஸ்டோர சப்ளையர்களென விளங்கும் இக்கம்பனியானது பர்மாவின் இரங்கூன் அக்யாப், மோல்மேன், பாஸ்ஸீன் நகரங்களின் மாத்திரமின்றி; லண்டன், லீவர்பூல், டன்டி, மான்செஸ்டர், பர்மிங்காம் வெஸ்ட்ஹார்ட்டில்பூல் நியூகாஸெல் ஆன் டைன். கிளாஸ்கோ, கார்டிப் பெல்பாஸ்ட், ஹாம்பாக் டிரீஸ்டி என்னும் படியான சீமைநகரங்களிலெல்லாம் ஏஜென்டுகள் அடையப்பெற்று வர்த்தக நடவடிக்கைகள் நடத்துகிறவர்களெனத்தீட்டி யிருக்கின்றது. நந்தனவன புட்பக்கிளைகளின் மத்தியில் பொற்சிறகமர்ந்த மயிலும் அதன் சமீபத்தே நற்சுகமார்ந்த பெண்மயிலும் வரையப்பட்டுள்ளது.

2—பெரியபடமோ? என்ன அருமை! என்னவியப்பு! என்ன காம்பீரம்! அம்மம்ம என் சொல்லுவாம். சூரியன் அஸ்தமிக்காத இராஜ்ஜியம் என பொன் எழுத்தால் பிரசுரித் திருக்கிறது மத்தியில் வெளித்தோற்றமாக அணிவகுத்து திரண்டுள்ளபிரிட்டனின்

இந்தியமுக்கிய சேனாதிபதியான ஸர்தார் கிச்சினர் பிரபு தமது இராணுவ கோலத்துடனிருக்க ஐக்கிய துவஜமானது ஆகாயமளாவி பறக்க, இரு இராணுவ ஆங்கிலவீரர் உருவிய கத்தியுடன் அதனைபாராக் கொடுக்க, ஆப்கானிஸ்தானத்து அமீர் ஹபிபுல்லாகானவர்களுக்கு, அதனை தமது தூரதிருஷ்டி கண்ணாடியால் காட்டி நிற்கும் பாவனை காட்டப்பட் டிருக்கிறது. தூரத்தில் தூரபார்வையில் ஆகிராநகரம் கண்களிலடிபடுகிறது. அதன்மேற்பகுதியில் பிரிடிஷ் இராஜ சின்னத்தின் கீழ் மகா ராஜ-சக்கரவர்த்திகளான நமது எட்வர்ட் மன்னரும், அலெக்ஸான்டிரா மகிஷியும் இராஜகோலத்துடன் காட்டப்பட் டுள்ளனர். மத்தியில்இராஜமுடி இலங்க அதன் கீழ் இந்திய இராஜப்பிரதிநிதி வைசிராய் எர்ல்மின்டோ பிரபு அவர்கள் தமக்குரிய சின்னங்களோடு காட்டப்பட்டிருக்கின்றனர். இவரையடுத்து பக்கத்தில் ஒரு புறம் நேபாளமகாராஜா, ஜாட்பூர் மகாராஜா, இந்தூர் மகாராஜா, மைசூர் மகாராஜா இவர்கள் ஓர் வட்டத்துள்ளும் (மறுபுறம் ஐதராபாத் நிஜாம், பரோடா) கேய்க்வார், குவாலியர் மகாராஜா காஷ்மீர் மகாராஜா இவர்கள் ஓர் வட்டத் துள்ளும் அவரவர்ளுக்குரிய ஆடை ஆபரண இராஜகோலத்துடன்காட்டப்பட் டிருக்கின்றது. அங்கிருந்து இருபக்கமும் பொற்கயிறினால் கோர்க்கப்பட்டுத் தொங்கும் வட்டங்களில் முறையே இருபக்கங்களில் நமது எதிர்கால மகாராஜா சக்ரவர்த்திகளான வேல்ஸ் இளவரசரும், இளவரசியாரும் தங்கள் இராஜகோலத்துடன் இலங்குகின்றனர் சித்திரங்கள் பலவர்ணங்களால் தீர்க்கப்பட்டிருப்பது கண்களைப் பறிக்கிறதாக விருக்கிறது. இவ்வளவு அருமையான காலண்டர்களையனுப்பிய பிரபு அவர்கள் நீடுவாழ்க நித்தியனருட் புரிவாராக அப்பெருமானுக்கு எமது நன்றியறிதலான வந்தனஞ் செலுத்துகின்றேம்.

இவற்றுடன் இவ்வருமையான காலண்டரைப் பற்றி எழுதியதினால் நமது கையொப்பநேயர்கள் அக்காலண்டர் பாலன்பும் ஆசையும் பாராட்டி எமதிடமிருப்பதைத் தங்களுக்கனுப்பிவைக்க எழுதாதிருக்கப் பெரிதும் பிரார்த்திக்கின்றோம்.

பத்திராதிபர்.

சமாசாரக் கொத்து.

ஹைகோர்ட் புல் பெஞ்ச்.

(சீவ் ஜஸ்டிஸ். ஜஸ்டிஸஸ் மௌஸ்-மில்லர் ரஹீம் முன்பாக)

10-3-09, லிமிட்டேஷன் லா பாயின்டு.

அதாவது ஒரு சிவில் மனுவர்ஜிக்கு வாயிதாவுக்குள் ஸ்டாம்பு ஒட்டிப் போட்டும் போதாமையால் வாப்ஸானபிறகு வாயிதா கடந்து பூர்த்தியாய் ஸ்டாம்பு போட்டுக்கொடுக்கப் பட்டதில் வாயிதா கடந்தது செல்லுமா வென்றதே பாயின்டாகியதைப் பற்றி விசாரிக்கப்பட்டதில், வக்கீல் மிஸ்டர் நாராயணையா வாயிதா போகவில்லை யென்றும், வக்கீல் மிஸ்டர் ரங்கநாதையர் வாயிதாபோய்விட்ட தென்றும் விவாதித்ததைக் கேட்டிருந்த ஜட்ஜிகள் வாயிதாபோகவில்லை யென்றே தீர்த்து விட்டார்கள்.

நுங்கம்பாக்கம் தேனம்பேட்டை களவுகள்:— இதற்காக ராமசாமி யென்பவனும்; அவன் தகப்பனாகிய ரெங்கசாமி யென்பவனும் பிடித்துக் கொண்டு வரப்பட்டதன் மேல் விசாரித்து வரும் சீவ் மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டு முன்பாக ஸிகரெட் கேஸ்கள், சர்க்கரை டப்பிகள், கிளாக்குகள் வாச்சுகள் முதலிய ஏராளமான களவுசொத்துகள் கொண்டுவந்துவைக்கப் பட்டிருக்கின்றன, இதில் சாக்ஷியானவர்கள் டர்க்டர் ஹெண்டர்ஸன் ஸர்ஜன் மேஜர் ஸ்மித், மேஜர் டானோவன், மெஸஸ் ரிச்மாண்ட், மேட்லி போர்ட்ஸெல் முதலியவர்களாம்- முதற் குற்றவாளி குற்றத்தை ஒப்புக் கொண்டிருப்பது மன்றி, இரண்டாவது குற்றவாளி பழைய ஆசாமி யென்று ருஜுப்படுத்தி வைப்பதற்காகப் போலீசாருக்கு வரும் 16-3-09 வரையில் வாயிதா கொடுக்கப்பட் டிருக்கிறது.

அரியவருகை:— நமது வியாசனின் ஆதரணைக் கர்த்தருளொருவரும் இரங்கூன்பர்மா ஆயில் கம்பனி 'ஆந்ரீக பஹிரங்க கடிதலிகிதரரும் வித்வஜன சேகரருமாகிய மதுரகவிப்புலவர் ஸ்ரீமந் ந. கபாலமூர்த்திப்பிள்ளை யவர்கள் மார்ச்சுமீ 5௳ இரங்கோனிலிருந்து பிரயாணமாகி 9௳ செவ்வாய்க் கிழமை சென்னை வந்து சேர்ந்தார்.

இந்தியத் திருத்த மசோதாவைப்பற்றி சென்னைக் காங்கிரேஸ் கமிட்டி.

இந்தியத்திருத்த மசோதாவைப்பற்றி ராய்ட்டர் ஏஜென்ஸிமூலமாய் சென்னைக் காங்கிரெஸ் கமிட்டியார் இந்தியா மந்திரிக்குப்பின் வருமாறு தந்தியனுப்பியிருக்கிறார்கள், இந்தியத்திருத்த மசோதாவில் கண்டுள்ள 3-வது கிளாஸ் அவசியமா யிருந்தே தீர வேண்டுமென்று சென்னைக் காங்கி

ரெஸ் கமிட்டியார் கருதுகிறார்கள். அந்த ஷரத்து (கிளாஸ்) சேர்க்கப்பட்டிருக்குமானால் வங்காளத்தில் சமாதானம் நிலைப்பதற்கு அது ஏதுவாகும், அது ஒழிக்கப்பட்டதற்காக சென்னைக்காங்கிரெஸ் கமிட்டியார் நிரம்ப வருந்துகிறார்கள், அப்படி அது ஒழிக்கப்பட்டிருப்பதனால் இந்தியத்திருத்தப் பிரேரணைகள் சரியானபடி யிருப்பதாய் ஏற்படுவதற்குப் பாதகம் ஏற்படும். மகமதியர்களுக்குத் தனி எலெக்டரேட்டுகள் ஏற்படுவது ஜாதி வேற்றுமை சச்சரவுகளுக்கு இடங் கொடுப்பதோடு மற்ற ஜாதிக்காரர்களும் அதே மாதிரி சுதந்தரங்கள் பெறப் பாத்தியதை கொண்டாடுவதற்கு ஏதுவாகும். இம்மாதிரி சென்னைக் காங்கிரெஸ் கமிட்டியார் இந்தியா மந்திரிக்கு தந்தியனுப்பி யிருப்பதில் அவர்கள் மற்ற மாகாணவாசிகள்தெரிவித்திருக்கும் அபிப்பிராயத்தை யொட்டித்தான் தங்கள் அபிப்பிராயத்தைத் தெரிவித்திருக்கிறார்கள்.

கவர்ன்மெண்டாருடைய நோக்கம்.

லண்டன், மார்ச்சு 10—

லெட்டினென்ட்கவர்னரவர்களுக்கு நிருவாகச்சபைகொடுக்க வேண்டுமென்ற நிபந்தனையைக் காமன்ஸ் சபையில் நிறைவேற்றிவிடக் கவர்ன்மெண்டார் கருதி யிருக்கின்றார்களென்றும், பழையபடியும் இம்மசோதா லார்ட்ஸ் சபைக்கு வரும் முன்பு எதிர்க் கக்ஷியாரால் கேட்கப்படுவதும் தங்களுக்கு அனுகூலமானதுமான சகல அபிப்பிராயங்களையும் சேகரிக்கக் கவர்ன்மெண்டார் கருதுகிறார்களென்றும், லண்டன் "ஸ்டாண்டர்ட்" பத்திரிகை கூறுகிறது,

எக்யாப்பில் தீவிபத்து.

பர்மாநாட்டைச்சேர்ந்த முக்கிய பட்டணங்களில் ஒன்றாகிய எக்யாப்பில் ஒரு கடையில் தீப்பிடிக்க 90 வீடுகள் வெந்து தணிந்தன 1000-ஜனங்கள்போல குடியிருக்க வீடின்றித் தவிக்கிறார்கள்.

லேடி மின்டோவும் கல்கட்டா மகமதிய ஸ்திரீகளும்.

கல்கட்டா மகமதிய ஸ்திரீகள் லேடி மிண்டோவைத் தங்கள் கோஷாக் கூட்டமொன்றுக்கு வரவேண்டுமென்றுகேட்டுக்கொள்ள அச்சீமாட்டி அப்படியே யாகட்டுமென்று இசைந்து அவர்களுடைய கூட்டத்துக்குச் சென்று அவர்களால் வாசித்துக் கொடுக்கப்பட்ட வந்தனோபசாரப்பத்திர மொன்றைப் பெற்றுக்கொண்டார், அச்சீமாட்டி அதனைப் பெற்றுக்கொண்டதைப் பற்றிய விசேஷ மென்னவென்றால் நீங்கள் பெருங் குழந்தைகளின் பிற்கால நடத்தை நீங்கள் அவர்களை வளர்க்கும் மாதிரியைப் பொறுத்திருக்கிறதென்று வற்புறுத்தி இந்நாட்டின் க்ஷேமத்துக்கு இந்திய மாதர்களே காரண பூதர்களா யிருக்கிறார்களென்றஅம்சத்தைத் தம்மை அழைத்து உபசரித்த மகமதிய ஸ்திரீகளின் மனதில் பதியும்படி செய்தார்.